Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily

மலர் 9
இதழ் 159
தேசிய தினசரி

பிலவங்க ஆடி 4 ரபி ஆகி 11 வியாழக்கிழமை [20-7-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# மட்டக்களப்பில் ஐக்கியம் வளரட்டும்

## புதிய மாநகரசபைக்கு மந்திரி 'திரு' நேரில் ஆசி

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பு மாநகர சபையின் முதலாவது கூட்டம் இன்று காலை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வைபவத்தில் கலந்துகொள்வதற்காக விசேஷ விமானத்தில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் வந்திருந்தார்.

மட்டக்களப்பு மேயர் திரு. செ. இராசதுரை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. திருச்செல்வம் உரைநிகழ்த்துகையில் கூறியதாவது:

மட்டக்களப்பு மாநகர சபை அங்கத்தவர்களெல்லோரும் இளம் துடிப்புடன் இருப்பதைக் காண நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன் உங்களது நல்ல நோக்கங்களெல்லாம் நிறைவேற என்னாலான உதவியை அளிக்க எப்போதும்நான் முன்நிற்பேன் மாநகரசபை அங்கத்தவர்கள் எல்லோரும் ஒருமைப்பட்ட ஒத்துழைப்பினால் மட்டக்களப்பை ஐக்கியம் வளரும் அழகு நகராக்க முயலுங்களென நான் கேட்டுக்கொள்கின்றேன். பொதுமக்களின் தேவை என்னஎன்பதைஅறிந்து அதற்கேற்ப உழைப்பதை அங்கத்தவர்கள் எல்லோரும் தமதுகடமையென உணர்ந்தால் மக்களின் நன்மதிப்பைப்பெறலாம்.

சம்பிரதாய முறைப்படி இன்று காலை 9-30 மணியளவில் ஆரம்பித்துவைக்கப்பட்ட மட்டக்களப்பு மாநகரசபையின் முதலாவது கூட்டத்தில் உதவி மேயர் திரு. ஜனுப் சின்னலெப்பை, மாநகரசபைஅங்கத்தவர்கள் அரசாங்க அதிபர் திரு. சதிர்காமநாதன், மற்றும் பிரமுகர்கள் பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## லங்காசுதந்திர கட்சி மகாநாடு

### இன்று காலியில் ஆரம்பம

காலி, புதன்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பதினைந்தாவதாண்டு மகாநாடு நாளை வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் காலியில் நடைபெறுகிறது.

பூஸா குதிரைப் பந்தயத்திடல் அரங்கில் நாளை பிரதிநிதிகள் மகாநாடு நடைபெறும். இம்மகாநாட்டையொட்டி அலங்கார வளைவுகளும் பந்தல்களும் அமைக்கப்பட்டுள்ளன.

கட்சியின் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகாவும் இதர தலைவர்களும் பிரதிநிதிகளும் நாளைக்காலை இங்குவந்து சேரவிருக்கின்றனர்.

வெள்ளிக்கிழமை மாலை நடைபெறும் பொதுக்கூட்டத்துடன் மகாநாடு முடிவடையும். பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர்களையோ, கம்யூனிஸ்ட்கட்சித்தலைவர்களையோ இதுவரை சுதந்திரக்கட்சியினர் அழைக்கவில்லையாம்.

மாவட்டசபைகள், இலங்கை இந்திய ஒப்பந்த அமுல்பற்றி முக்கிய தீர்மானங்களை மகாநாடு நிறைவேற்றுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பொலிஸ் பொறுப்பில் ஆனையிறவு முகாம்

யாழ்ப்பாணம், புதன்

ஆனையிறவிலுள்ள தடுப்பு முகாம் அடுத்தமாதம் முதலாம்திகதி தொடக்கம் பொலிஸாரின் நேரடி மேற்பார்வையின்கீழ் ஒரு நிரந்தர பரிசோதனை நிலையமாக இயங்கும். இத்தகவலை பிரதமர் திரு. டட்லி சேனநாயக நேற்று முன்தினம் நடைபெற்ற வடபகுதி பொலிஸ் இராணுவ அதிகாரிகள் மகாநாட்டில் தெரிவித்தார்.

இம்மகாநாட்டில் வடபகுதி இராணுவ கமாண்டர் திரு. மொரிஸ் ஜெயவீரா, வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் ஆகியோர் விசேஷமாகக் கலந்துகொண்டனர்.

அடுத்தமாதம் முதல் திகதி முதல் இப்பரிசோதனை நிலையத்துக்கு ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் பொறுப்பதிகாரியாகநியமிக்கப்படுவார். இங்கு கடமையாற்ற மேலதிமாக 7 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் நியமிக்கப்படுவார்களென்றும் தெரிகின்றது. ஆனையிறவுமூலம்நடைபெறும்உப உணவுப்பொருட்களினதும், உணவுப் பொருட்களினதும் கடத்தலைத் தடுக்கவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகஅறியப்படுகின்றது.

இங்கு கடமையாற்றும் பொலிஸாருக்கு உதவிய க சில இராணுவஊழியர்களும் நியமிக்கப்படுவார்களாம். அவசியம் ஏற்படும்பொழுது மாத்திரமே பொலிசார் உதவிகோரினால் இராணுவத்தினர் அங்கு கடமையாற்ற அழைக்கப்படுவார்களாம். மேலும் வனஇலாகா, உணவு இலாகாவைச் சேர்ந்த ஊழியர்களும் இங்கு கடமையாற்றுவார்கள். இப்பரிசோதனை நிலையத்துக்கு நிரந்தரமான ஒரு கட்டடம் இவ்வருடமுடிவிற்குள் நிறுவப்படுமெனவும் தெரிகின்றது..

ந. நி.

## 8 நாடுகள் இலங்கைக்கு ரூ. 23 கோடி கடனுதவி

கொழும்பு, புதன்

அமெரிக்கா, பிரிட்டன், பாரதம், ஜப்பான், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, கனடா, மேற்கு ஜெர்மனி ஆகிய எட்டு நாடுகள் இதுவரை இலங்கைக்கு 22 கோடி 70 லட்சம் ரூபா வரையான கடன் உதவியை செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஜேர்மனி விரைவில் 2 கோடி 40 லட்சம் ரூபாவை இலங்கைக்கு நீண்டகால கடன் உதவியாக வழங்கவிருக்கிறது. இதற்கான ஒப்பந்தம் சில தினங்களில் கைச்சாத்திடப்படவிருக்கிறது. மேற்கு ஜேர்மனி இதுவரை 10 கோடி ரூபா கடன் உதவி வழங்கியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட நாடுகளின் கடன் உதவியைக் கொண்டு இலங்கை தனக்குத் தேவையான பொருள்களைக் குறிப்பாக இயந்திர சாதனங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வாய்ப்பு இருந்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்துக்கென தனியான திட்டம்

### அண்ணா அறிவிப்பு

சென்னை, ஜூலை 19

தமிழகத்துக்கென தனியான ஒரு அபிவிருத்தித் திட்டம் அமைக்கப்படவிருப்பதாக தமிழக முதல்அமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை தமிழக மேல்சட்டசபையில் தெரிவித்தார்.

திட்டக்கமிஷன் அங்கத்தவரான திரு. ஆர். வெங்கட்ராமனுடன் தாம் இதுபற்றி ஆலோசனை செய்ய விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த திட்டம் ராஜிய தேவைகளைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்படும் என்றும் திரு. அண்ணாதுரை விளக்கினார். இத்திட்டம் ராஜ்யத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்யவும் உதவும் என அவர் குறிப்பிட்டார்.

## யாழ். ரயில் நிலையத்தில் பஸ், டாக்ஸி வசதி

### இருநிலையங்கள் அமைக்கமுடிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் பொதுமக்களின் நலனை உத்தேசித்து புதிய பஸ் நிலையம் ஒன்று அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமைக்கப்படவிருக்கின்றது. அத்துடன் டாக்ஸி நிலையம் ஒன்றும் அங்கு அமைக்கப்படும்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்தில் நடைபெற்ற புகையிரத, பொலிஸ், இ. போ. சபை அதிபர்களைக் கொண்ட மகாநாடொன்றில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது. இம்மகாநாட்டில் இ. போ. ச. பிராந்திய அதிபர் திரு. வேலுப்பிள்ளை, வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம், யாழ்ப்பாணம் புகையிரதநிலைய அதிபர் திரு முருகேசு, புகையிரத நிலைய உயர் அதிகாரிகளான இரத்தினசிங்கம், நடராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

(6ம் பக்கம் பார்க்க)

## 'தூத்துக்குடி துறைமுக வேலை தடைப்படாது'

### மத்திய போக்குவரத்து அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 19

'தூத்துக்குடி துறைமுக வேலை திட்டமிட்டபடி தொடர்ந்து நடைபெறும். இதில் எதுவித தடையுமிருக்காது' என இன்று லோக சபையில் போக்கு வரத்து அமைச்சர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் தெரிவித்தார்.

துறைமுக வேலைகளுக்கென இந்த வருடத்தில் ஒதுக்கப்பட்ட நிதி இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். முன்னர் 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது இப்போது ஒரு லட்சம் ரூபாவாக ஒதுக்கப்பட்டுள்ளது.

துறைமுக வேலைகள் சம்பந்தமாக தமிழகமுதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரையுடன் அவ்வப்போது தொடர்பு கொண்டுவருவதாகவும் டாக்டர்ராவ் எடுத்துக் கூறினார்.

தூத்துக்குடி துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகம் ஆக்கும் திட்டம் லாபம் தராதுஎனவும் இதனை நிறைவேற்றக்கூடாது எனவும் நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் அறிவித்திருந்ததைத் தொடர்ந்து தமிழகத்தில் உருவான அதிருப்தி நிலையைத்தீர்க்குமுகமாகவே டாக்டர் ராவ் இவ்வாறு அறிவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கோபத்தினின்றுபெரு மயக்கம் உண்டாகிறது. பெரு மயக்கத்தினின்று நினைவின் கேடு விளைகின்றது. நினைவு கெட்டால் பகுத்தறிவு அழிகிறது. பகுத்தறிவு அழியப் பெற்ற மனிதன் முற்றும் அழிந்து போகிறான்.

— ஸ்ரீகிருஷ்ணர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

[illegible] ப்பாலம் பிலவங்க-ஆடி 4 (20-7-67)

## வேலை நிறுத்த சூழ்நிலை

வேலைநிறுத்த அலை மீண்டும் அடிக்கத்தொடங்குவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன. அலை பெரிதாகி பெரும் மோதலையும் கெடுதியையும் ஏற்படுத்துவதற்கு முன் உறுதியான நடவடிக்கை எடுத்து தடுத்துவிடவேண்டியது அவசியம்.

கொழும்புத் துறைமுகத்தில் முக்கிய பகுதிகளில் வேலை செய்யும் இலங்கை வர்த்தக சிப்பந்திகள் யூனியனைச் சேர்ந்தவர்கள் ஐயாயிரம் பேர் வேலை நிறுத்தத்துக்கு ஆயத்தம் செய்கிறார்கள். இதேசமயம் தங்கள் பழைய கோரிக்கைகளைப் புதுப்பித்து பொதுவேலைநிறுத்தமொன்றை ஆரம்பிக்க வேறுபல தொழிற்சங்கங்களும் முனைகின்றன. இதற்கான தூண்டுதல் முயற்சிகளும் நடைபெறுகின்றன.

மாதக்கணக்காக ஒரு தனியார் ஸ்தாபனத்தில் நடைபெற்றுவரும் வேலை நிறுத்தம் காரணமாக அந்த ஸ்தாபனத்துக்கு வரும் பொருள்களை இறக்குமதி செய்வதில்லையென்று துறைமுகத்தில் வேலைசெய்யும் இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்க ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர். அந்த ஸ்தாபனத்துக்கு வந்த உணவுப் பொருள் சிலவற்றைஇறக்குமதிசெய்ய மறுத்த ஊழியரை துறைமுகக் கூட்டுத்தாபனம் வேலையிலிருந்து நிறுத்தி வைத்துள்ளதுதான் துறைமுகத்தில் பொதுவேலை நிறுத்தம் செய்வதற்கான ஆயத்தங்களுக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

தனியார் ஸ்தாபனத்தில் மாதக்கணக்காக வேலைநிறுத்தம் நடைபெறுவதைப் பார்த்தும், பாராமல் விட்டிருப்பதும் அதில் தொழில் அமைச்சர் தலையிட்டு நடவடிக்கை எடுக்காமல்விட்டிருப்பதும் சரியென்று கூறமுடியாது. வேலை நிறுததம் செய்வதற்கு ஆயத்தம் செய்யும் ஊழியர்களுக்கு குறைகளில்லையென்றும் சொல்லமுடியாது.

ஆனால் வேலைநிறுத்தங்கள்மூலம்தான் பிரச்னைகளைத் தீர்க்க முடியுமா? குறைகளை நீக்கமுடியுமா? நாட்டின் இன்றைய பொருளாதார நிலையில், வாழ்க்கைச்செலவு உயர்ந்தும் மக்கள் பெரும் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கையில் வேலைநிறுத்தங்கள் நடைபெறுவது நாட்டுக்கோ மக்களுக்கோ நன்மை தருமா? ஏற்கனவே உணவுக் கஷ்டம். இச்சமயத்தில் இலங்கைக்கு மாவு விற்பனை செய்துவரும் நாடுகள் மாவின் விலையையும் அதிகரிக்க முடிவு செய்துள்ளன. மத்திய கிழக்கு நெருக்கடி காரணமாக சூயஸ் கால்வாய்க் கப்பல் போக்கு வரத்துகளுக்கு மூடப்பட்டிருக்கிறது. இலங்கைக்குப் பண்டங்கள் ஏற்றிவரவேண்டிய கப்பல்கள் ஆயிரக்கணக்கான மைல் அதிக தூரம் பிரயாணம் செய்து இங்கு வரவேண்டி உள்ளன. இதன்விளைவாகவும்இங்கு வரும் பொருள்களின்விலை அதிகரிக்கும். அத்தியாவசியப் பொருள்களும் உரிய நேரத்தில் இங்கு வந்து சேர முடியாது.

இந்நிலையில் துறைமுகத்தில் வேலைநிறுத்தம்செய்வதும் இதர தொழிலாளரும் வேலைநிறுத்தத்திலிறங்குவதும் அரசாங்கத்துக்கு மட்டுமல்ல இந்நாட்டு மக்களுக்கே பெரும் தீங்கு செய்வதாகும்.

தபால் பிரிப்போரின் வேலைநிறுத்தத்துக்கு அரசாங்கம் பணிந்துகொடுக்காது துணிவுடனும் உறுதியுடனும் செயலாற்றியது போல் இந்த வேலை நிறுத்த மிரட்டல்களையும் அரசாங்கம் சமாளிக்கவேண்டுமெனவே பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். இதேசமயம் தொழிலாளரின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றவும் நடவடிக்கையெடுக்கவேண்டும்.

★ தமிழ்பாட புத்தகங்கள் ★ அதிபர்கள் நியமனம் ★ கல்விமுறையில் மாற்றம்

# வடபகுதிக்கு விஞ்ஞான ஆசிரியர் புதிதாக நியமிக்கப்படவில்லை

— ச. அம்பிகைபாகன் —

[தலைவர், வடமாகாண அதிபர்கள் சங்கம்]

வடமாகாண கல்லூரி அதிபர்கள் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் வண்ணை. வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்றது. அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. ச. அம்பிகைபாகன் இன்றைய கல்வி நிலைபற்றி பல முக்கிய விஷயங்களை, தமது தலைமை உரையில் எடுத்துக்கூறினர். தலைமையுரையின் சுருக்கம் இங்குவெளியிடப்படுகிறது.



பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் வடமாகாணத்திலுள்ள எந்தப் பாடசாலைக்கும் புதிய விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் நியமிக்கப்படவில்லை என்பதை நாங்கள் அறியக் கூடியதாயிருக்கிறது. ஆசிரியர்கள் இளைப்பாறியதன் மூலமும், ராஜினாமா செய்ததன் மூலமும், மரணமானதன் மூலமும் பாடசாலைகளில் எத்தனை காலியிடங்கள் ஏற்பட்டிருக்ககும் என்பதை நாம் சுலபமாக அறிந்து கொள்ளலாம். மேலும் கடந்த சில வருடங்களாக விஞ்ஞான பாடங்களைப் பயிலும் மாணவர்கள் அதிகரித்துள்ளனர். கடந்த வருடம் நாங்கள் எடுத்த புள்ளி விபரங்களின்படி 13 பாடசாலைகளில் உயர் பிரிவு வகுப்புகளுக்கு பௌதிகம், கணிதம் பாடங்கள் போதிப்பதற்கு பட்டதாரி ஆசிரியர்கள் தேவைப்பட்டது 3 பாடசாலைகளில் ரசாயனம் படிப்பிப்பதற்கும். 1 பாடசாலையில தாவர இயல் படிப்பிப்பதற்கும்பட்டதாரி ஆசிரியர்கள் தேவைபட்டது. மேலும் காலியிடங்கள் ஏற்பட்டதால் இவ் வருடம் நிலைமை மோசமாகியிருக்கும்.

### நிதி நிலைமை காரணமல்ல

காலியான சில இடங்கள் இடமாற்றத்தின் மூலமும், ஆசிரியர்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் நிரப்பப்பட்டுள்ளன, ஆனால், இந்த மாதிரியான செயலினால் பரீட்சை பெறுபேறுகள் திருப்திகரமாக இருக்கவில்லை காலியான இடங்களை நிரப்புவதற்கு நிதிநிலைமை ஒரு காரணமாக இருக்காது. இந்த காலியான இடங்களை நிரப்புவதற்கு தராதரம் பெற்றவர்கள் இல்லையெனக் கூறிவிட முடியாது ஆசிரியர் சேவையில் ஈடுபடுவதற்கு தற்பொழுது வேலையற்றிருக்கும் பல இளம் இலங்கை விஞ்ஞானப் பட்டதாரிகள் ஆவலாக இருக்கின்றனர்.

### விஞ்ஞான ஆசிரியர்

நாங்கள் பல வருடங்களாக தீர்த்துக் கொள்ள முயற்சித்து வரும் ஒரு பிரச்னை தான், விஞ்ஞான ஆசிரியர்களை நியமனம் செய்யும் பிரச்னை. இப் பிரச்னையை நாங்கள் பல தரப்பட்ட நிலையில் ஆராய்ந்தோம். கடந்த மாதம் கூட இப் பிரச்னை சம்பந்தமாகக் கல்வி அதிபதியுடன் தொடர்பு கொண்டோம். ஆனாலும் இப் பிரச்னையை தீர்ப்பதற்கான எந்த வழியையும் நெருங்கியதாகத் தென்படவில்லை.

### மற்றொரு பயமுறுத்தல்

போதிய வேலையற்ற பட்டதாரிஆசிரியர் எனறமுறையில் எங்கள் பாடசாகளுக்கு மற்றொரு பயமுறுத்தல் எதிர்நோக்கியுள்ளது. வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களின் புள்ளி விபரங்களைச் சேகரிப்பதற்கு கடந்த தவணை கொழும்பிலிருந்து ஒருகோஷ்டி இங்கு வந்ததை நீங்கள் அறிவீர்கள். இக கோஷ்டி வட பிராந்தியத்திலுள்ள பாடசாலைகளில் 112 போதிய வேலையற்ற பட்டதாரிகள் இருப்பதாக அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக அறியப்படுகிறது. இந்த அறிக்கையின்படி கல்வி இலாகா இவர்களை வட பிராந்தியத்திலிருந்து இடமாற்றஞ் செய்வதையிட்டு கவனம் செலுத்தி வருகிறது போதிய வேலையற்ற பட்டதாரி ஆசிரியர்கள் என்பவர்கள் அவர்கள் போதிக்க வேண்டிய பாடங்களை பத்து மணித்தியாலங்கள் படிப்பிக்காதவர்கள் என கருதப்படுகிறது. இவ் விஷயத்தை இங்கு வந்த கோஷ்டி எங்களிடம் தெரிவித்த போதுஎங்களில் பலர் ஆச்சரியமடைந்தனர். ஏனெனில் இவ் விஷயத்தை இதற்கு முன்னர் எவரும் எங்கள் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. பட்டதாரி ஆசிரியர்கள் மேல் பிரிவு வகுப்புகளுக்கு 15 மணிந்தியாலம் படிப்பிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### சிறந்த போதனை

பட்டதாரி ஆசிரியர்கள் போதிக்க வேண்டிய பாடங்களில், சிலருக்கு ஏன் வேலை கொடுக்கக்கப்படவில்லையென்ற காரணத்தைகோஷ்டியிடம் நாங்கள் எழுத்து மூலம் தெரிவித்தோம். பாடசாலைகளில் நடந்து வரும் சிறந்த போதனை இனியும் நடைபெற வேண்டுமானால் இவர்கள் தொடர்ந்துஇங்கு கடமையாற்ற விட வேண்டியது அவசியம்.

### நிரந்தர அதிபர்கள்

பாடசாலைகளுக்கு நிரந்தரமாக அதிபர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என நாங்கள் நீண்ட காலமாகக் கோரிவருகிறோம். கல்வி இலாகா சில இடங்களை மட்டும் நிரப்பியிருக்கிறது. இன்னும் பல பாடசாலைகளில் குறிப்பாகமகளிர்பாடசாலைகளில்உதவிஅதிபர்கள்தான் கடமையாற்றி வருகின்றனர். இனியும் தாமதம் செய்யாமல் இப்பாடசாலைகளுக்கு நிரந்தரமான அதிபர்களைநியமனம் செய்யவேண்டும். நியமனம், பதவி உயர்வு பற்றிய விஷயங்களில் கையாளப்பட்டு வரும் வழிகள் எங்களுக்கு திருப்தியளிக்கவுல்லை.

### கல்வி அமைப்பில் மாற்றம்

கல்வி அமைப்பில் மாற்றம் ஏற்பட்டு வரும் இந் நேரத்தில் சிறந்த ஆலோசனை தரக்கூடிய நிலையிலுள்ளவர்களும் கல்வியின் எதிர் காலத்தில் அக்கறை கொண்டவர்களுமான அதிபர்கள் ஆசிரியர்கள் கூட மறைமுகமாகவே வைக்கப்பட்டிருக்கின்றனர். இம் மாற்றங்களையிட்டு எங்களுக்கு புள்ளிவிபரங்கள் கோரப்பட்டபோது தான் தெரிய வந்தது.

### இருவித பாடசாலைகள்

பத்திரிகைகள் மூலமும், மற்றும் வழிகளிலிருந்தும் நாங்கள் அறியக் கூடியது என்னவென்றால் சிரேஷ்ட பாடசாலை, கனிஷ்ட பாடசாலை என இரு விதமான பாடசாலைகளை வைத்திருப்பதென அதிகாரிகள் இறுதி முடிவு எடுத்திருப்பதாகத்

[6-ம் பக்கம் பார்க்க]

## இன்றைய பலன்

வியாழக்கிழமை
[ஆடிமாதம் 4-ம் திகதி]

நட்சத்திரம் - மூலம் [காலை 6-44 வரை]. மேல் பூராடம்.
திதி- சதுர்த்தசி இரவு 9-34 வரை. மேல் பௌர்ணமி.
சுபநேரம் 7--31-9-01
ராகுகாலம்-1-31- 3-01
மேடம்-சுபதினம்
ரிஷபம்- நிதானம் வெல்லும்.
மிதுனம்- முயற்சியால் உயர்ச்சி.
கடகம்- நஷ்டமடைதல்
சிம்மம்- போசனச் சொகுசு.
கன்னி-பொது விரோதம்.
துலாம்-கவலைகள் திரும்
விருச்சிகம்- அமைதியின்மை.
தனுசு- வீண் பீதி.
மகரம்-குதூகலம்.
கும்பம்-ஊக்கமிகுதி.
மீனம்- மக்கள்சுகம்.

[illegible] திருமலை வேலுப்பிள்ளை

## நாட்டிலும் நகரிலும்

இந்த இருபதாம் நூற்றூண்டில் உலகத்திலே மிகப் பெரிய புரட்சியை உண்டு பண்ணியவர் யார்?

இந்தக் கேள்விக்குப் பலர் பல விதமாக மறுமொழி சொல்லக்கூடும்.

சிலர், பொதுவுடமை என்ற கொம்யூனிஸத்தைப் புகுத்திய மார்க்ஸ், லெனின் என்று சொல்வார்கள். சிலர் புரட்சிவாத கொம்யூனிஸத்தின் தலைவர் ட்ரொட்ஸ்கி என்பார்கள். இன்னும் சிலர் அஹிம்சா தத்துவத்தின் மூலகர்த்தா மகாத்மா காந்தி என்பர். வேறு சிலர் வின்ஸ்டன் சேர்ச்சில் என்பர், கெனடி என்பர், நேரு என்பர், பண்டாரநாயக்கா என்பர். இப்படிப் பல பலர்.

புரட்சி என்ருல் பெரும் மாறுதல் என்று பொருள் படும். இதைப் பார்க்கப் போனால் உண்மையான பெரும் புரட்சி செய்தவர் ஒருவர் இருக்கிறார். அவருடைய பெயரைச் சொன்னால் பலர் அருவருக்கக் கூடும். ஆனால் அதுதான் உண்மை.

1939ம் ஆண்டுக்கு முன்னர் பிரித்தானியா அலைகளை ஆட்சிசெய்தது என்றும், பிரித்தானிய ராஜ்யத்தில் சூரியன் ஒருபோதும் அஸ்தமிக்கமாட்டாதென்றும் கூறி வந்தார்கள். பள்ளிக்கூட மாணவர்கள் படித்த உலகப் படங்களில் எல்லாம் பிரிட்டனின் சிவப்பு வர்ணமே முக்கால்வாசிப் பிரதேசத்தில் பூசப்பட்டிருந்தது. வட அமெரிக்கா ஆசியா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா போன்ற நாடுகள் எல்லாவற்றிலும் சிவப்பு வர்ணம் தீட்டப்பட்டிருந்தது.

இந்தச் சிவப்பு மாறுவதற்குக காரணமாயிருந்தவர் ஒருவர். அவர் பெரியதோர் புரட்சிசெய்தது என்னவோ மறுக்கமுடியாத ஒரு பேருண்மை. ஆனால் இன்று எல்லோரும் அவரை அவதூறு செய்கிறார்கள். அவர்தான் ஜெர்மன் தலைவர் ஹிட்லர்.

இன்று அவரது நாமம் பலருக்குக் கசப்பாயிருக்கிறது. ஆனால் அவர் இரண்டாவது உலக மகாயுத்தத்தைத் துவக்கியிராவிட்டால் இந்த மாறுதல்கள் எல்லாம் நடந்திருக்குமா?

இந்த இருபதாம் நூற்றூண்டில் தெரிந்தோ தெரியாமலோ மிகப் பெரிய புரட்சிகளை உண்டாக்கியவர் ஹிட்லர். அதற்காக அவர் ஒரு பெரும் சிறந்த தலைவன் என்று நான் கூற வரவில்லை தம்மை அறியாமலே அவர் ஒரு பெரும் புரட்சியை உண்டுபண்ணிவிட்டார்.

சூரியன் ஒருபோதும் அஸ்தமிக்காது என்ற பிரித்தானிய ராஜ்யம் மறைந்துவிட்டது. இந்தியா, பர்மா, இலங்கை, மலாயா முதலிய நாடுகள் நிறம் மாறிச் சுதந்திரமடைந்தன. ஆங்கிலேயருடன் சேர்ந்து ஆசிய-ஆபிரிக்க நாடுகளைச் சுரண்டிப் பிழைத்த பிரெஞ்சுக்காரரும் டச்சுக்காரரும், போத்துக்கீசரும், பெல்ஜியரும் 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்று ஓடினார்கள்.

[6-ம் பக்கம் பார்க்க]

# ‘ஆக்கிரமிப்பு பகுதிகளிலிருந்து இஸ்ரேல் உடனே வெளியேற வேண்டும்’

## ஐ. நா. பந்தோபஸ்து சபைக்கு ரஷ்ய வெளியுறவு மந்திரி கடிதம்

ஐ.நா.(நியுயோர்க்), ஜூலை 19

**ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து இஸ்ரேல் உடனே வெளியேறவேண்டுமென ரஷ்ய வெளியுறவு மந்திரி திரு. குரோமிக்கோ ஐ. நா. பந்தோபஸ்து சபைத் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள ஒரு அவசரக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

சூயஸ்பகுதியில் இஸ்ரேல் துருப்பினா நடத்திவரும் தாக்குதல்கள் பெரிய போரை உருவாக்க வழிசோலிவிடுமெனக் குறிப்பிட்டுள்ள அவர், இஸ்ரேலியர் தாம் ஆக்கிரமித்த பகுதிகளில் நின்றுகொண்டிருப்பது வீணன விளைவுகளையே ஏற்படுத்துமெனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

### அல்ஜீரியா, ஈராக் தலைவர்கள்திரும்பினர்

மாஸ்கோ, ஜூலை 19

மாஸ்கோவில் ரஷ்யத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய அல்ஜீரிய பிரதமர்திரு. பொமிடியான், ஈராக் அதிபர் திரு. அராப் ஆகியோர் பேச்சுவார்த்தையைமுடித்துக் கொண்டுதாயகம் திரும்பியுள்ளனர்.

### ரஷ்யத்தூதர்-நாஸர் சந்திப்பு

கெய்ரோ, ஜூலை 19

கெய்ரோவிலுள்ள ரஷ்யத் தூதரை ஐ.அ.குடியரசு ஜனாதிபதி நாஸர் சந்தித்து மேற்கு ஆசிய நிலைமை குறித்து பேச்சுவார்த்தைநடத்தினர்.

### ராணுவ நடவடிக்கை பிரிட்டன் குறைத்தது

லண்டன், ஜூலை 19

சூயஸ் கிழக்குப்பகுதியில் பிரிட்டன் தனது இராணுவ நடவடிக்கையைக் குறைத்துக்கொண்டுள்ளதாக அறிவிக்கபபட்டுள்ளது.

---

புதுடில்லி, ஜூலை 19

பாரத வெளியுறவு மந்திரி திரு.சாக்ளா கெய்ரோவுக்கு பயணமாகியுள்ளார். அவர் ஜனாதிபதி நாஸருடன் மேற்காசியநிலைமை பற்றி ஆராய்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ‘வியட்னும்பிரச்னையில் அமெரிக்கா தீர்வுகாண விரும்புகிறது’

### ஜனதிபதி ஜோன்சன் அறிவிப்பு

வாஷிங்டன், ஜூலை 19

**வியட்னும் பிரச்னையில் தீர்வுஒன்றைக் காண அமெரிக்கா விருப்பம் கொண்டுள்ளதாக அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்சன் தெரிவித்துள்ளார்.**



பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியொன்றிலேயே ஜனதிபதி ஜோன்சன் இவ்விதம் கூறினர்.

இதுவிஷயத்தில் அமெரிக்காவின் கொள்கையை விளக்கிய அவர், கம்யூனிஸ்டுகள் வியட்னும் பிரச்னையில் தீர்வொன்றைக்காண்பதில் ஆர்வம் காட்டாதிருப்பதாகத் தெரிவித்தார்.

வியட்னுமில் அமெரிக்க குண்டுவீச்சு நிறுத்தம்பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை.

**ஹொங்கொங்கில்**

### அரசாங்க கட்டடங்கள் சேதப்படுத்தப்பட்டன

ஹொங்கொங், ஜூலை 19

ஹொங்கொங்கில் கிளர்ச்சிக்காரர்களைக் கைதுசெய்வதில் பொலிசார் தீவிர ‘வேட்டை’யில் இறங்கியுள்ளனர்.

பொலிசார் இவ்வித வேட்டையில் இறங்கிய போது சில கார்கள் எரிக்கப்பட்டன. வெடிகுண்டுகள் வீசப்பட்டதால் பல அரசாங்கக் கட்டடங்கள் சேதமாகின.

வெடிகுண்டு வீசப்பட்ட போது இருவர் படுகாயமுற்றதாகவும் அறிக்கப்பட்டது

### தூத்துக்குடி துறைமுகம் லாபம் தராதாம்

புதுடில்லி, ஜூலை 19

‘‘தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாக்கும் திட்டத்தை நிறைவேற்றக்கூடாது. இதனல் லாபம் கிடைக்காது’’ என்று மத்திய அரசாங்க அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் தெரிவித்துள்ளார்.

‘‘தூத்துக்குடி துறைமுகத்தை பெரிய துறைமுகமாக மாற்றுவது பொருளாதாரரீதியில் லாபமானது அல்ல’’ என்று மொரார்ஜி தேசாயின் பொறுப்பிலுள்ள நிதி இலாகா தெரிவித்துள்ளது.

தூத்துக்குடி துறைமுகத்துக்காக இதுவரை சுமார் ஐந்தரைக் கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. இருந்தும் பரவாயில்லை. திட்டத்தைக் கைவிடுவது நல்லதென்று நிதி இலாகா யோசனை கூறியுள்ளது.

### சூரியன் பற்றி விரிவான படம்

மாஸ்கோ, ஜூலை 19

சூரியன் பற்றிய புதிய தகவல்களைத்தரக்கூடிய விரிவானபடமொன்றை ரஷ்யா பிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### நைஜீரியாவில் விமானச் சண்டை

லாகோஸ், ஜூலை 19

சமஷ்டி நைஜீரியாவிலிருந்து பிரிந்து சென்ற பியாவ்ரா (கிழக்கு நைஜீரியா) வுக்கும் சமஷ்டி நைஜீரியாவுக்குமிடையில் நடைபெற்றுவரும் சண்டையில் விமானத்தாக்குதல்கள் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

### தாஷ்கண்ட் ஒப்பந்தம் பற்றி சாக்ளா

புதுடில்லி, ஜூலை 19

தாஷ்கண்ட் ஒப்பந்தம் இப்போது பயனற்றுப் போய்விட்டதாக இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சாக்ளா தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தை செயல்படுத்துவது சம்பந்தமான ஒரு விளக்கத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

மேற்காசிய நாடுகளுடன் நட்புறவு வைத்திருப்பது பாரதத்துக்கு அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

### மகோற்சவம்

கோப்பாய், புதன்

கோப்பாய்வடக்குபலானை சிவகாமியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 22-ம் திகதி ஆரம்பமாகிறது. ஆகஸ்ட் 7-ல் ரதோற்சவமும் மறுதினம் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

**வள்ளுவரின்**

### 2000 ஆண்டு நிறைவு 1969-ல் விரிவாக கொண்டாடப்படும்

### கிளிநொச்சி எம். பி. யோசனையை தமிழக அமைச்சர் வரவேற்ருர்

சென்னை, ஜூலை 19

தமிழ்அகராதி தயாரிக்கும் பணியில் தமிழகம் சென்றுள்ள கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமிழக அமைச்சர்கள் சிலரைச் சந்தித்து இதுசம்பந்தமாக ஆலோசனை நடத்தினர்.

கல்வி கைத்தொழில் அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியனைச் சந்தித்த திரு. இரத்தினம் தமிழ் வளர்ச்சி, திருவள்ளுவர் திருநாள் முதலிய பல விஷயங்கள் பற்றி கலந்து உரையாடினர்.

இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு நிகழ்ச்சிகளில் திருக்குறள் நூற்காட்சியும் அமையவேண்டுமெனத் திரு. இரத்தினம் தெரிவித்த கருத்தை அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் ஏற்றுக்கொண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரிடம் இப்பணியை ஒப்படைப்பதாகத் தெரிவித்தார்.

முதலாவது உலகத் தமி[illegible] ஆராய்ச்சி மகாநாட்டி[illegible] தமிழ் அறிஞர்களுக்கும் த[illegible] முக்கும் போதிய இட[illegible] அளிக்காத குறையை போக்கவேண்டுமென திரு[illegible] இரத்தினம் கூறியதையு[illegible] அமைச்சர் ஏற்றுக்கொண்டு பொருள் தெரி குழுவிலும் வழிப்படுத்துக் குழுவிலும் தமிழ் அறிஞர்களே இட[illegible] பெறுவர் எனவும் உறு[illegible] தெரிவித்தார்.

திருவள்ளுவரின் திரு[illegible] வீடுதோறும் கொண்[illegible] வேண்டுமெனவும் [illegible] ஆண்டு நிறைவு ழ[illegible] 1969ல் சிறப்புறக்[illegible] டாட வேண்டுமென[illegible] திரு. இரத்தினம் [illegible] வித்த ஆலோசனை[illegible] அமைச்சர் வரவேற்[illegible] திருவள்ளுவரின் 2000 ஆண்டைக் கொண்டாடுவதுபற்றிய உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில்ஒரு தீர்மானம் நிறைவேற்றலாம் எனவும் அமைச்சர் கருத்துவெளியிட்டார்.

## தமிழ்நாட்டிலிருந்து வரும் செய்திகள்

### பொருட்காட்சிக்கு 3 கோடி செலவாகும்

சென்னை, ஜூலை 19

‘‘சென்னையில் நடைபெறவிருக்கும் உலகப் பொருட்காட்சிக்கு ரூபா 3 கோடி செலவாகும்’’ என தமிழ்நாடு சட்டசபையில் தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

உலகப் பொருட்காட்சி, அடுத்த வருடம் ஜனவரி 12ந் தேதி முதல் பெப்ரவரி 17ந் தேதி வரை நடைபெறவிருக்கிறது.

ஃ ஃ ஃ

### காங்கிரஸ் மகாநாடு

பறங்கிமலைத் தொகுதியின் காங்கிஸ் மகாநாடு இம்மாதம் 30ந் தேதி தாம்பரத்தில் நடைபெறவிருக்கின்றது. இந்த மகாநாட்டில் காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர், பாண்டிச்சேரி முதலமைச்சர் திரு. பரூக் மரக்காயர் ஆகியோர் கலந்துகொள்ள இருக்கின்றுர்கள்.

ஃ ஃ ஃ

### ஆலயங்களில் திருமணப்பதிவு

கோவில்களின் நிர்வாக அலுவலர்கள், அந்தந்தக் கோவிலில் நிகழும் திருமணங்களைப் பதிவுசெய்வதற்காகத் திருமணப் பதிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகக் கூட்டுறவு அமைச்சர் திரு. மாதவன் தெரிவித்தார். கோவில்களில் நடைபெறும் திருமணங்களைச் சட்டபூர்வமாகப் பதிவுசெய்யவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் விளக்கியுள்ளார்.

### எம். ஜி. ஆர். ஊர்வலத்தில் திருட்டு

சென்னை தீவிபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் நடத்திய நிதி சேகரிப்பு ஊர்வலத்தில் ஜனக்கூட்டத்துள் புகுந்து திருட முயன்ற இருவரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

### ரஷ்ய பத்திரிகை குற்றச்சாட்டு

மாஸ்கோ, ஜூலை 19

ரஷ்ய எல்லைக்குள் ஆயிரக்கணக்கான சீன செங்காவலர்கள் அத்துமீறி நுழைந்ததாக ரஷ்யப்பத்திரிகையான பிராவ்டா குற்றம்சாட்டியுள்ளது.

### ஜப்பான் கம்யூனிஸ்ட் சீனஉறவை முறித்தது

டோக்கியோ, ஜூலை 19

ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சி சீன கம்யூனிஸ்ட கட்சியுடனன தனது உறவை முறித்துக்கொண்டுள்ளது.

தனது பிரதிநிதிகள் விரும்பத்தகாதவகையில் நடத்தப்பட்டார்கள் என்ற காரணத்தினுலேயே ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சி இவ்வித நடவடிக்கை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சி தனது இருபிரதிநிதிகளை இப்போது திருப்பி அழைத்துக்கொண்டுள்ளது.

### விழா பூர்த்தி

கோப்பாய், புதன்

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோலில் வருடாந்த அலங்கார உற்சவம் பூர்த்தியடைந்தது. இறுதி நாளன்று பூங்காவனமும். திருக்கல்யாண உற்சவமும் நடைபெற்று பூந்தண்டிகையில் சுவாமி எழுந்தருளினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘நெருங்கிப் பழகிய இளைஞன் தற்கொலை செய்து கொண்டார்’

## களத்தாவை இரட்டை கொலை வழக்கு

அநுராதபுரம், புதன்
‚ஜூலியர் சந்திரசேகராவுடன் நெருங்கிப்பழகிவந்த ஓர் இளைஞன், சந்திரசேகராவின் வீட்டில் தற்கொலை செய்துகொண்டார்’ களத்தாவை இரட்டைக் கொலை வழக்கில் புத்தளத்தைச்சேர்ந்த முகமட் பகிர் மேற்கண்டவாறு கூறினர். இவ்வழக்கு அநுராதபுரம் மாஜிஸ்திரேட் திரு. பலி...ரணசிங்கா முன்னிலை விசாரணை செய்யப்பட்...

...கமட் பகிர் தொடர்ந்து ...யதாவது: இச்சம்பவத் ... பின்னர் சந்திரசேகரா ...வும் மனம் நொந்தவ...கக் காணப்பட்டார். மித...ஞ்சிக் குடிக்கவும்ஆரம்பித்...ர். சில நாட்களின் பின் அவர் அநுராதபுரத்தில் ...ப்படவில்லை.

டபிள்யு. திக்கிரிபண்டா சாட்சியமளிக்கையில் கூறியதாவது: 1ம் எதிரி சொய்சாவை எனக்குத் தெரிந்திருந்த போதிலும் களு அல்பேர்ட்டை எனக்குத் தெரியாது. நான் வேலைசெய்யும் வயலுக்குச்சென்றுகொண்டிருந்தபோது வில்லிமாமாவை கண்டேன். ஒரு வருடத்திற்குப்பின் நான் அந்த வயலில் வேலை செய்யச் சென்றேன். 1ம்எதிரி அந்த வயலைவாங்கியிருந்தார். வில்லிமாமா தெரிவித்ததைத் தொடர்ந்து நான் அவ்வேலை செய்வதை நிறுத்தினேன்.

இவ்வழக்கில், அல்பிரட் டீ சொய்சா, களு அல்பேர்ட் வில்லிமாமா ஆகியோர், பி. கே.டி. பெரேரா, ஜூலியஸ் சந்திரசேகரா ஆகியோரைக் கொலைசெய்ததாகக்குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

# ‘...மதானம்கிராமத்தவர்க்குபுதிதல்ல’

— உதவி அரசாங்க அதிபர்

உடுப்பிட்டி, புதன்
...வொரு கிராமத்திற்...கள் அத்தியாவசிய... ஆதலால் வீதிக...துமக்கள் சிரமதா...மூலம் ஒற்றுமையான முறையில் அமைக்க முன்வரல் வேண்டும். கிராம மக்களுக்குச் சிரமதானம் புதியதல்ல. பண்டைக் காலத்திலே கிராமத்திற்குத் தேவையான சகல பொதுக் கருமங்களையும் கிராம வாசிகளே கூட்டுறவு முறையில் பூர்த்தி செய்து வந்தனர். 450 ஆண்டுகளாக அந்நிய ஆட்சியில் வாழ்ந்த நாம் எமது பண்டைக்கால சமூக கலாச்சாரங்களை அழிய விட்டுவிட்டோம். இதனுல் எம்மை அலட்சிய மனப்பான்மை சூழ்ந்து கொண்டது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னரே நாட்டு மக்களிடையே சுதந்திர உணர்ச்சியும், முன்னேற்ற மனப்பான்மையும் தோன்றியது” என கரவெட்டி மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் 5-வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை கூறினர். கரவைநுங்கோடை முருகமூர்த்தி ஆலய முன்றலில் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் தலைமையில் விழா நடைபெற்றது.

மற்றும் திருவாளர்கள் பண்டிதர் க. வீரகத்தி, சு. கணபதிப்பிள்ளை, பூபாலசிங்கம், ஏ. ... மாணிக்கம், க. இரத்தின சிங்கம் உட்படவேறு பலரும் பேசினர்.

விழாவையொட்டி நடாத்தப்பட்ட திருவள்ளுவர் நினைவு தினப்பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு உதவி அரசாங்க அதிபர் பரிசில்களை வழங்கினர். வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு:-

‘ஏ’ பிரிவு-மு. இரத்தினம், ‘பி’ பிரிவு- கே. குலசேகரம், ‘சி’ பிரிவு- கி. செல்வம், செல்வி சி. தவமணி, க. செல்வராசா, ஆ. கிருஷ்ணபிள்ளை.

## சைக்கிளைக் காணவில்லை

உடுப்பிட்டி, புதன்
படம் பார்க்கச் சென்றவர் சைக்கிளைப் பறிகொடுத்தார். நெல்லியடியிலுள்ள தியேட்டரொன்றில் படம் பார்க்கச்சென்ற கொற்றுவத்தையைச்சேர்ந்த கனகசபாபதி என்பவர்படம் பார்த்துவிட்டு வெளியே வந்தபொழுது தனது சைக்கிள் மாயமாய் மறைந்து விட்டதைக் கண்டாராம். இது சம்பந்தமாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

# இன்று கண்டியில் விபுலானந்தர் விழா

யாழ்ப்பாணம், வியாழன்
கண்டி மத்திய மகாணச் சைவமகாசபையினர் இன்று முத்தமிழ்வித்தகர் விபுலானந்த அடிகளார்விழாவைக் கொண்டாடுகின்றனர். கண்டி புஷ்பதான மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவுக்கு கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமை வகிப்பார். மாலை 4-30 மணிக்கு சைவ மகாசபை மண்டபத்தில் ஆராதனையின்பின் அடிகளாரின் திருவுருவப்படம் மகாசபை மண்டபத்திலிருந்து புஷ்பதான மகளிர்கல்லூரி மண்டபத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு விழா ஆரம்பமாகும். திரு. அ. துரைசாமிப்பிள்ளை விழாவை ஆரம்பித்துவைப்பார்.

பண்டிதர் வி. சீ. கந்தையா, வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவர். திருமதி விமலேஸ்வரி தனபாலசிங்கம், செல்வி மல்லிகாவதி நாகலிங்கம் ஆகியோரது இன்னிசைக்கச்சேரியும் விழாவில் இடம்பெறும்.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## வியாழன் 20-7-67

**செய்திகள்:** காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 தொழிலாளர் வேளை, 1-00 கதம்பஇசை

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 தமிழோடிசைபாடல், 6-30 பேச்சு— எஸ். செல்வரத்தினம், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 தாளவாத்தியக்கச்சேரி, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இன்னிசை விருந்து — சரஸ்வதி ... கியாராசா.

# அமைச்சர் சுகததாசா வருவார்

யாழ்ப்பாணம். வியா.
விளையாட்டுப்பகுதி அமைச்சர் திரு. சுகததாசா எதிர் வரும் 9ம் திகதி யாழ்ப்பாணம் வருவார் என எதிர் பார்க்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை பாடசாலைகளின் ஹாக்கிவிளையாட்டுப்போட்டிகளின் இறுதிப்போட்டிகளில் அமைச்சர் கலந்துகொள்வார் என தெரியவருகிறது. சாம்பியன்களாகவரும் கோஷ்டிகளை அமைச்சர் கௌரவித்து பரிசில்களும் வழங்கவிருப்பதாகத் தெரியவருகிறது.

பருத்தித்துறை

# பாடசாலைகள் கலைவிழா

இமையாணன், புதன்
“கல்விபோதனை எல்லாக் கிராமங்களிலும் சமத்துவமாக இருக்க வேண்டும்” என பருத்தித்துறை வட்டாரப் பாடசாலைகளின் கலைவிழாவிற்குத் தலைமை வகித்துப்பேசிய பருத்தித்துறை எம். பி. திரு. கே துரைரத்தினம் கூறினர்.

இவ்விழாவில் வட்டாரக் கல்வியதிகாரி வெ. கந்தசாமி உட்படப்பலர் கலந்துகொண்டனர். திருமதி க. துரைரத்தினம் பரிசு வழங்கினர். போட்டிகளில் வெற்றுபெற்ற கல்லூரிகள் வருமாறு;—

அபிநயப்பாட்டு; பொலிகண்டி அரிமெரிக்கன் மிஷன் பாடசாலை, ஆழியவளை ஸி. ஸி. பாடசாலை, கர்நாடக சங்கீதம்; கலட்டி ரோமன் கத்தோலிக்கபாடசாலை, தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை, செம்பியன்பற்று ரோமன் கத்தோலிக்க பாடசாலை

சாதாரணநடனம்; வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிஷன் பாடசாலை, மருதங்கேணி சைவவித்தியாசாலை.

கிராமிய நடனம்: பருத்தித்துறை சென்தோமஸ் ரோமன் கத்தோலிக்க பாடசாலை, நாகர்கோவில் ரோமன் கத்தோலிக்க பாடசாலை.

நாடகம்; நாகர்கோவில் ரோமன் கத்தோலிக்க பாடசாலை, தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை. செம்பியன்பற்று அரசினர் பாடசாலை.

# விண்ணப்பக்காரர் வெகு குறைவாம்

கொம்பனித்தெரு, புதன்
இம்முறை மத்திய எழுதுவினைஞர் பரீட்சைக்கு 13,500 பேர் மாத்திரமே விண்ணப்பித்திருப்பதாகப் பரீட்சைப்பகுதி அதிகாரி ஒருவர் கூறினுர். இம்முறை இப்படி வெகு குறைவாக விண்ணப்பித்திருப்பதற்குக் காரணம், ஜி.சி.ஈ. சதாரண பரீட்சையில் 4 பாடங்களில் விசேஷ சித்தி, பெற்றோர் மாத்திரமே இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என்ற பரீட்சைப்பகுதியினரின் விதிமுறையாயிருக்கலாம் எனத் தெரிவித்தார்.

# மீண்டும் களவுகள்

புன்னாலைக்கட்டுவன், புதன்
சில மாதங்களுக்கு முன் ஊரெழுப்பகுதியில் மாட்டுத் திருட்டுகள் அதிகம் நடைபெற்று வருவதைத் தொடர்ந்து பலர் தம் மாடுகளைத் தோட்டத்தில் கட்டும் வழக்கத்தைக் கைவிட வேண்டியேற்பட்டது. இப்பொழுது இப் பகுதியில் வாழைக்குலைகள் அதிகமாகத் திருடப்படுகின்றன. ... கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்...



இலங்கை

# லயன்ஸ் கழக புதிய தலைவர்

கொழும்பு, புதன்
சர்வதேச லயன்ஸ் கழகத்தின் இலங்கைக் கிளையின் புதிய பிரதேச கவர்னராக திரு. பீலிக்ஸ் பெரேரா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சிக்காகோ நகரில் நடைபெற்ற சர்வதேச லயன்ஸ் கழக மகாநாட்டில் திரு. கே. சச்சிதானந்தாவின் இடத்துக்கு இவர்இம்மாதம் 8-ம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்.

வழக்கறிஞரான திரு. பீலிக்ஸ்பெரேரா கொழும்பு தெற்கு லயன்ஸ் கழகத் தலைவராக முன்னர் கடமையாற்றியவர் என்பதும் அவரது அயராத சேவைக்காக பல சன்மானங்கள் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. திரு. பெரேரா உலக சமாதான கட்டுரைப் போட்டியில் பரிசைத்தட்டிக்கொண்டுள்ளார்.

திருவாளர்கள் மலோறி விஜயசிங்கா, ஏ. ஏ. டி’ எஸ். ரூபசிங்கா ஆகிய இருவரும் உதவி மாவட்ட கவர்னர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# நீதிஅமைச்சரை கேட்பர்

கொம்பனித்தெரு, புதன்
பல ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் வாழும் இடமான கொம்பனித்தெருப் பகுதியில் தமிழர் ஒருவரை சமாதானநீதிபதியாக நியமித்துத்தரும்படி கொம்பனித்தெரு தமிழ்பேசும் மக்கள் நீதியமைச்சரை நேரில் கண்டு கேட்டுக்கொள்ள இருப்பதாகத் தெரிகின்றது.

# தற்கொலை

பூநகரி, புதன்
பூநகரி மட்டுவில் நாட்டைச் சேர்ந்த திரு. கே. சதாசிவம் நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார். கடன்தொல்லை காரணமாகத் தாம் தற்கொலை செய்வதாக இறந்தவர் ஒரு கடிதம் எழுதிவைத்திருந்தார். பிரேத பரிசோதனையின் பின் மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

# இலங்கைக்கு சிங்கப்பூர் படகுகள்

கொழும்பு. புதன்
இலங்கை கடற்படை சிங்கப்பூரிலிருந்து அதிகவேகமாகச் செல்லக்கூடிய 12 ரோந்துப் படகுகளை வாங்கவிருக்கிறது.

## யாவர்க்கும் முக்கியம்

சங்கானை. புதன்
“கட்டுப்பாடும் ஒழுங்கும் யாவர்க்கும் மிக அவசியம். கல்லூரிகள் இவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மாணவன் ஒருவன் தனது கல்லூரிக்கும் ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் தாய் நாட்டிற்கும் எவ்வேளையிலும் சேவை செய்யத்தயாராக இருக்க வேண்டும்” என வடபகுதி பொலிஸ்அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் இளவாலை அர்ச் ஹென்றி அரசர் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். திருமதி சுந்தரலிங்கம் பரிசில்கள் வழங்கினர்.

சீவரத்தினம் இல்லம், எமிலியா. லூயிஸ்இல்லம், தேவசகாயம் இல்லம் ஆகியன முறையே 1,2,3,ம் இடங்களைப்பெற்றன.

## பாரதிதாசன் படிப்பகம்

உடுப்பிட்டி, புதன்
அல்வாய் பாரதிதாசன் படிப்பகத்தின் வருடாந்தக் கூட்டம் திரு. சி. சத்திய மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-சி. சத்திய மூர்த்தி செயலாளர்-ச. நடராசன், தனுதிகாரி-க. தபேந்திரன், படிப்பகப் பொறுப்பாளர்- ஆ. ஜெகந்நாதன் உதவிபொறுப்பாளர்-ச. நவரத்தினராசா, கணக்குப்பரிசோதகர்-செ. செல்வராசா. நிர்வாக சபை உறுப்பினர்கள்-ஏ. இராசலிங்கம், அ. தேவச்சந்திரன், ச. துரைராசா, பொ. கணேசராசன்

# இடமாற்றம்

வவனியா, புதன்
மகாவலி கங்கைத்திட்டத்தில் கடமையாற்றிய விவசாயப் போதனுசிரியர் திரு. மாட்டின் வவனியா தெற்கு தமிழ்ப் பிரிவுக்கும். வவனியாவில் கடமையாற்றிய விவசாயப் போதனுசிரியர் திரு. கே. வி. சீவர்த்தினம் தோப்பூருக்கும் இடமாற்றம்பெற்றுள்ளனர்.

## இலவச வகுப்பு

உடுப்பிட்டி, புதன்
வடகரவை இந்துமாமன்ற ஆதரவில் இலவச சைவ சமய வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றன.


விற்று முடிப்பதற்காக
விலைகள் மிகவும் குறைக்கப்பட்டுள்ளன.

| | வி. வி. | ம. வி. |
|---|---|---|
| மோட்டெக்ஸ் [நைலோன்] சேட் | 24-50 | 16-00 |
| டிப்ளொமட் [டெரலீன்] சேட் | 24-50 | 17-50 |
| பெங்கர் வெள்ளை [டெரலீன்] சேட் | 24-50 | 22-00 |
| டெல் டெக்ஸ் [இயாட்டெக்ஸ்] சேட் | 13-50 | 11-50 |

விரையுங்கள்

பொகுமால்ஸ்

C. W. E. பிடவை மாளிகை

49, மெயின் வீதி, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 பாடசாலைகள் கலந்துகொள்ளும் அகில இலங்கை ஹாக்கி போட்டி

## யாழ். விளையாட்டரங்கில் ஆகஸ்ட் 6-ல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியாழன் அகில இலங்கை பாடசாலைகளின் 8வது வருடாந்த ஹாக்கி விளையாட்டுச்சுற்றுப்போட்டி எதிர்வரும் 6ம் திகதி யாழ்ப்பாணவிளையாட்டரங்கில் நடைபெறவிருக்கிறது. சரித்திரத்தில் முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் அகில இலங்கைப் பாடசாலைகள் ஹாக்கி விளையாட்டுப் போட்டியில் இலங்கையின் 50பாடசாலைகள்வரை கலந்து கொள்ளுகின்றன. இலங்கையின் 8மாவட்டங்களில் இருந்தும் சுமார் 250தெரிவு செய்யப்பட்ட ஹாக்கி வீரர்கள் போட்டி தினத்துக்கு முதல் நாளே யாழ்ப்பாணம் வந்து சேருவார்கள்.

இச்சுற்றுப் போட்டியில் கொழும்பிலிருந்து 4கோஷ்டிகளும், கண்டியிலிருந்து 4 கோஷ்டிகளும் மாத்தளையிலிருந்து 2கோஷ்டிகளும் ஊவாப் பிரிவிலிருந்து 2 கோஷ்டிகளும் யாழ்ப்பாணத்திலிருந்து 2கோஷ்டிகளுமாக 14கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன. இப்போட்டிகள் தொடர்ந்து 4நாட்கள் நடைபெறும். இறுதிப்போட்டிகள் ஆகஸ்ட் 9ம்திகதி நடைபெறும்.

17வயதுக்கு மேற்பட்டோர் 20வயதுக்குக்கீழ்ப்பட்டோர் என இருபிரிவாக நடாத்தப் படவிருக்கும் இப்போட்டிகளில் 20 வயதுக்குக்கீழ்ப்பட்டோரில் 'ஏ' பிரிவில்கொழும்பு ஹெட்ஸ்கோஷ்டி ஊவாக்கோஷ்டி யாழ்ப்பாணம் தெரிவுக் கோஷ்டி, கண்டிக் கோஷ்டி ஆகியனவும் 'பி' பிரிவில் மாத்தளை, கண்டிபுளூஸ், கொழும்புபுளூஸ் கோஷ்டிகள் ஆகியனவும், 17வயதுக்கு மேற்பட்டோர் 'ஏ' பிரிவில் கொழும்புஹெட்ஸ் கோஷ்டி கொழும்பு புளூஸ் கோஷ்டி மாத்தளைக்கோஷ்டி, ஆகியனவும் 'பி' பிரிவில் கண்டி வைற்ஸ் கோஷ்டி, ஊவாக் கோஷ்டி யாழ்ப்பாணம்தெரிவுக்கோஷ்டி கண்டி புளூஸ் கோஷ்டி ஆகியனவும் போட்டியிடும்.

## பரந்தன் கெமிக்கல் கூட்டுத்தாபனம்

தேர்ச்சியுள்ள 1-ந் தர மேசன்மாருக்கு வெற்றிடம் இருக்கிறது. 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ந்திகதிக்கு முன்பு உற்பத்தி அதிபர், பரந்தன் கெமிக்கல்ஸ் கூட்டுத்தாபனம், பரந்தன் என்ற விலாசத்திற்கு எழுத்துமூலம்விண்ணப்பிக்கவும்.

உற்பத்தி அதிபர்.

1967 - ஜூலை 20, 20

## நடான் பிறதேர்ஸ் வெற்றி

உடுப்பிட்டி, புதன்

அல்வாய் இந்து வாலிபர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட 2-ம் ஆண்டு கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் நடான்பிறதேர்ஸ், தெரிவுக் கோஷ்டியை 2-1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு. க. பொன்னம்பலம் மத்தியஸ்தம் வகித்தார்.

வைரமுத்து வெற்றிக் கேடயத்தை நடான் பிறதேர்ஸும், சோமசுந்தரம் வெற்றிக் கேடயத்தைக் கூல்பார் விளையாட்டுக் கழகமும் சுவீகரித்துக் கொண்டன. வதிரி பொம்பர்ஸ் விளையாட்டுக் கழகம் இரண்டாமிடத்தைப் பெற்றது. வடமராட்சி காரியாதிகாரி திரு. ஏ. ஸி. விசுவநாதன் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார். கலை, கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## கல்லூரி இளைஞர் விவசாயக்கழகம்

புன்னாலைக்கட்டுவன். புதன்

உரும்பராய் இந்துக் கல்லூரி இளைஞர் விவசாயக்கழக உத்தியோகத்தராகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். காவலர்; திரு. ஏ. வைத்தியலிங்கம், தலைவர்: திரு. சீ. மூர்த்தி, உபதலைவர்: கே. தில்லநடராசா, செயலாளர்: வை. லோகேஸ்வரன்.

## ஆசிரியர் வெற்றி

புன்னாக்கட்டுவன், புதன்

உரும்பராய் இந்துக்கல்லூரி ஆசிரியர்கோஷ்டிக்கும் மாணவர் கோஷ்டிக்குமிடையில் நடந்த உதைபந்தாட்டப்போட்டியில் ஆசிரியர் கோஷ்டி 2—1 கோல்களால் வெற்றியீட்டியது. ஆசிரியர் கோஷ்டியில் திருவாளர்கள் மூர்த்தியும், நவரத்தினமும், மாணவர் கோஷ்டியில் குமரேஸ்வரராஜாவும், விமலேந்திரராஜாவும், திறமையாக விளையாடினர். திரு. எஸ். மரமேஸ்வரன் மத்தியஸ்தம்வகித்தார்.

## பாண்டியன் வெற்றி

யாழ்ப்பாணம், வியா.

வேலணை தெற்கு ஐயனார் வித்தியாசாலை வருடாந்த விளையாட்டுப்போட்டியில் மூவேந்தர்களின் பெயர்களைக் கொண்ட இல்லங்கள் மோதிக்கொண்டன. பிரதம விருந்தினராக பாடசாலையின் முன்னாள் தலைமைஆசிரியர் திரு. ஐ, கார்த்திகேசு கலந்துகொண்டார். சேர, சோழ, பாண்டிய இல்லங்களில் முதலிடத்தைப் பாண்டிய இல்லம் பெற்றது. முதலிடம் பெற்ற பாண்டியன் இல்லத்திற்கு உபகரிக்க வெள்ளிக்கிண்ணம் வழங்கப்பட்டது. இதனையும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களையும் திரு. ஐ. கார்த்திகேசு வழங்கினார்.

## நான்கு இடம்

யாழ்ப்பாணம், வியா.

வடஇலங்கைத் தமிழாசிரிய சங்கத்தினர் நடாத்திய வலி. மேற்குப் பகுதிப் பேச்சுப்போட்டியில் யாழ். பிளவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலையினர் நன்குஇடங்களைச் சுவீகரித்துக்கொண்டனர்.

பரிசு பெற்றோர் விபரம்: கீழ்ப்பிரிவு ஆண்- மு. தவபாலன் (1-வது), க. ஜெயசோதி (3-வது).

மத்திய பிரிவு பெண்- ந. நாகேஸ்வரி (1-வது).

மேற்பிரிவு பெண்- பொ. அன்புக்கரசி [3-வது].

பாடசாலை ஹாக்கி சுற்றுப் போட்டி

## சென். ஜோன்ஸும் அருணோதயாவும் சாம்பியன்கள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் பாடசாலை ஹாக்கிவிளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற பாடசாலை ஹாக்கிச் சுற்றுப்போட்டியில் 20 வயதுக்குக் கீழ்ப்பட்டோர் பிரிவில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியும் 17 வயதுக்கு மேற்பட்டோர் பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

வடபகுதியின் 7 பாடசாலைகளில் இருந்தும் 11 கோஷ்டிகள் பங்குபற்றின. 20 வயதுக்கு கீழ்ப்பட்டோர் தெரிவில் சென். ஜோன்ஸ் கோஷ்டி 8 புள்ளிகளும், யாழ். மத்தியகல்லூரி ஏழு புள்ளிகளும், கோப்பாய் கிறிஸ்ரியன்கல்லூரி 4 புள்ளிகளும், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி 3 புள்ளிகளும், கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயம் 2 புள்ளிகளும் முறையே பெற்றன.

அவ்வப்பாடசாலை மைதானங்களில் நடைபெற்ற இப்போட்டிகளின் இறுதிப் போட்டிகள் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றன.

எதிர்வரும் 22-ம் திகதி சென்ஜோன்ஸ்கல்லூரிக்கும் பாடசாலை தெரிவுக்கோஷ்டிக்குமிடையேயான சிநேகபூர்வமான தரமான ஹாக்கிப்போட்டிகள் நடைபெறவிருக்கின்றன யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கும் இப்போட்டிகள் யாழ்ப்பாணம் பாடசாலை ஹாக்கி விளையாட்டுச் சங்கத் தலைவர் திரு. எஸ். வி. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

17-ம் பிரிவின் படியான அறிவித்தல்.

என் 1946 - கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ம் பிரிவின் 1961-ம் ஆண்டு திருத்தப்படியான 60-ம் இலக்க பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான் இதன் அட்டவணை பத்தி I-ல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபையின் கூட்டத்தை அந்த அட்டவணைப் பத்தி II-ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையின் பத்தி III-ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி IV-ல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

சி. சி. மாணிக்கவாசகர்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சி அமைச்சு,
யாழ்ப்பாண அலுவலகம்,
யாழ்ப்பாணம், 12 ஆடி 1967.

அட்டவணை

| பத்தி I கிராமச்சபையின் பெயர் | பத்தி II திகதி | பத்தி III நேரம் | பத்தி IV இடம் |
|---|---|---|---|
| நீர்வேலி | 28-7- 7 | காலை 10-00 மணி | கிராமச்சபை அலுவலகம், நீர்வேலி. |

4004 GP


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] காமினி
ராஜ் [நீர்கொழும்பு] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீ கிருஷ்ணா [திருமலை]

20.7.67

எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
ரி. ஆர். ராமச்சந்திரன் - நாகேஷ்
நடித்த

அன்பே வா

(ஈஸ்ட்மென் கலர்)

இசை: எம். எஸ். விஸ்வநாதன்

கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர்

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-45
3போயாதினங்களில் 4காட்சிகள்
கண்ணதாசன்
கே. ஆர். விஜயா
நடித்த
கறுப்புப்பணம்

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர்
எல். விஜயலெட்சுமி
நடித்த
இருவல்லவர்கள்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 4-45, 7-00, 9-45
Dirk Bogarde
Sarah Mile
in
SERVANT

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Stewar Granger
Dorian Gray
in
THE LEGIONS
LAST PATROL



## வரிவிளம்பரம்

### சேவை

கிருங்சாவ்ற் கிறைன்டிங்..

கிருங்சாவ்ற் கிறைன்டிங், சிலின்டர் றிபோறிங், சிலின்டர் பொலிஷிங் செய்து கொடுக்கப்படும். ராமகிருஷ்ணாஸ், ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். போன்:7179 2417

### தேவை

சமையற்காரர்:

பண்டத்தரிப்பு தியாகருஜ் வீதியில் புதிதாக அமைக்கவிருக்கும் ருஜ் ஹோட்டலுக்கு [Rajh Hotel] சமையல் வேலையில் அனுபவம்நிறைந்தவர்கள் தேவை. நேரில் வரவும். தியாகருஜா. 2510

பகுதி நேர தட்டெழுத்தாளர்:

தனிப்பட்ட ஒருவருக்கு ஆங்கில அறிவுள்ள - ஆங்கில தட்டச்சு தெரிந்த ஒருவர் பகுதி நேர வேலை செய்வதற்கு தேவை. அனுபவம், தராதரம், வயது முதலிய விபரங்களுடன் விளம்பர இல: 2431, மே/பா "ஈழநாடு", த. பெ. எண் 49, யாழ்ப்பாணம். என்ற விலாசத்துக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2431

### விற்பனைக்கு

தோட்டம்:

80 ஏக்கர் நெல், தென்னை, முந்திரி தோட்டம் ஆனையிறவுக்கருகில் உள்ள இயக்கச்சியில் விற்பனைக்குண்டு. முழுசாகவோ, துண்டுகளாகவோ கொடுக்கலாம். பின்வரும் விலாசத்துக்கு எழுதவும்: ஹவுஸ் அன்ட் புறொப்பெர்டி ட்றேட்ஸ் லிமிட்டெட், த. பெ. இலக்கம் 1077, கொழும்பு. 2427

நெல்வயல்

கிளிநொச்சி இரண்டாம் வாய்க்காலிலுள்ள "றிச் சாட் பாம்" என்றழைக்கப்படும் 12 ஏக்கர் நெல்வயல் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு இல: 22, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 2428

காணி

மேற்குக் கொக்குவிலிலுள்ள சங்கக்கடைக் கெதிராக இருக்கும் வடக்கு ஒழுங்கை ஓரமானதும் றோட்டுக்குக் கிட்டவுள்ளதுமான ஆதனம் பரப்பு நாலு. கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. P. மதியாபரணம். பலாலி றோட், 4-ம் கட்டையடி, உரும்பராய். 2430

### வைத்தியம

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி. யாழ்ப்பாணம்.

### FOR SALE

Typewriter

Remington "Super-riter" Standard Typewriter 15" Carriage second hand, Sparingly used: Apply:-P. Durairatnam, 101/1 Palaly Road, Kandarmadam, Jaffna 2432

வியாபாரம பெருக
விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகரசபை: பீலிக்ஸ் பிரஸ்தாபம்

கொழும்பு, செவ்.

யாழ்ப்பாணம் மாநகர சபையை மீண்டும் இயங்கச் செய்வதற்கு இன்னும் ஏன் தாமதம் ஏற்படுத்தப்படுகிறது. முன்னரும் இது பற்றி நான் சபையில் கிளப்பியபோது விரைவில் யாழ்ப்பாண மாநகரசபை மீண்டும் நிறுவப்படும் என்று கூறினர். ஆனால் இன்னும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று இன்று பிரதிநிதிகள் சபையில் தொம்பே எம். பி. திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா கூறினர்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது பேசிய திரு. பீலிக்ஸ், உள்ளூராட்சி மந்திரி உள்ளூராட்சி மன்றங்களை மூடுவதில்தான் அக்கறை கொண்டிருக்கிறார் என்றும், யாழ்ப்பாணம் மாநகரசபையை விரைவில் நிறுவ ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் சொன்னர்.

# 'மாவட்டசபை பற்றி அச்சமடைய வேண்டாம்'

## முஸ்லிமகளுக்கு தொழிலமைச்சர் உறுதி

கொழும்பு, செவ்.

மாவட்டசபை பற்றி முஸ்லிம்கள் எவ்வித அச்சமும் கொள்ளவேண்டியதில்லையென்று தொழில் மந்திரி திரு. எம். எச். முகமத் இன்று பார்லிமெண்டில் தெரிவித்தார்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதானவிவாதத்தில் தொழில் மந்திரி உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

மாவட்ட சபையின் கீழ் முஸ்லிம்களின் உரிமைகள் யாவும் பாதுகாக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் முஸ்லிம்களின் உரிமைகள் பற்றி அக்கறையுள்ளவராக இருக்கிறரெனவும் திரு. எம் எச். முகமத் கூறினர்.

தொழில் மந்திரி தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் கூறியதாவது:-

பண்டாரநாயகாவின் அரசாங்கம் நடைபெற்ற காலத்தில் நிகழ்த்தப்பட்ட எல்லா சிம்மாசனப்பிரசங்கத்திலும் மாவட்டசபை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போதெல்லாம் கம்யூனிஸ்ட் கட்சியும் டாக்டர் என். எம். பெரேராவும் அதனை ஆதரித்திருக்கிறார்கள். இப்போது சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவிக்கப்பட்ட மாவட்ட சபை எப்படிப்பட்டது என்பது கூட எனக்குத் தெரியாது! அது எப்படியான விதத்தில் உருவாகுமென்பது கூடத்தெரியாது. உண்மையில் அது இன்னும் உருவாகவில்லை. ஆனல் முஸ்லிம் மக்களுக்கு உறுதியாக ஒன்று மட்டும் சொல்லிவைக்க விரும்புகிறேன். மாவட்ட சபை பற்றிச் சிலர் முஸ்லிம் மக்களுக்குப் பாதகமான முறையில் பிரசாரம் செய்வதிலெல்லாம் உண்மையில்லை. அவைகள் எல்லாம் தவறுன பிரசாரம்.

### விஸ்தாரமான மாநகர சபை

மாவட்டசபை மத்தியஅரசாங்கத்தின் பொறுப்பிலேயே இயங்குமென்றும், அது ஒரு விஸ்தாரமான மா நகரசபையாகவிளங்கும் என்று சொல்லாமெனத் தொழில் மந்திரி தமது உரையில் தெரிவித்தார்.

பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம் பேசுகையில், பண்டாரநாயக்கா அரசாங்கம் சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவித்திருந்த மாவட்ட சபையே இப்போது குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட சபை என்று கூறினர்.

### ஜனதின, எத்த

கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்தன தமது அமைச்சின் கடந்தகால சாதனைகள் பற்றி விபரமாக விளக்கினர்.

ஜனதின, எத்த பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டது பற்றி திரு. பிலிப் குணவர்தன குறிப்பிடுகையில், எதிர்க்கட்சியினர் அப்பத்திரிகைளை தடை செய்துவிட்டதுபற்றி அதிகம் பேசுகிறர்கள். அவை சமசமாஜக் கட்சி, சுதந்திரக் கட்சிகளின் ஆயுதங்கள் பொய்யும் புளுகும், இந்தப் பத்திரிகைகளைப் போல் வேறு எந்தப் பத்திரிகைகளிலும் நான் காணவில்லை. நான் முன்னர் பழகிய பிரமுகர்களே இந்தப் பத்திரிகைகளை நடாத்துகிறர்கள் என்பதை அறிய எனக்கே வெட்கமாக இருக்கின்றது என்றார்.

ஜனநாயகத்தைக் காப்பாற்ற வருபவர்கள் யாராய் இருந்தாலும் அவர்களுடன் தாம் சேர்ந்து கொள்ளத் தயாராய் இருப்பதாகவும், ஜனநாயகத்துக்காக பிசாசின் மாமியாருடன் கூட தாம் சேர்ந்துக் கொள்ளத் தயார் என்றும் அவர் சொன்னர்.

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஜூலை மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சாகும்போதும 'அண்ணு' சுலோகம

கிளிநொச்சி, செவ்.

வாழ்க திராவிட முன்னேற்றக் கழகம், வாழ்க அறிஞர் அண்ணு' எனக் கோஷமிட்டவண்ணம் கிரிமிநாசினியை உட்கொண்டார் இளம் வாலிபர் ஒருவர்.

இச்சம்பவம் பரந்தன் குமரபுரத்தில் நடைபெற்றது. வறுமையின் காரணமாகத் தாம் இவ்வுலகை விட்டுப் பிரிவதாகவும் இனிமேல் தமக்கு இங்கு இடம் இல்லையென்றும் இறந்தவர் உறவினருக்குத் தெரிவித்திருந்தார் என மரண விசாரணையின் போது தெரியவந்தது.

இம்மரணம் சம்பந்தமாக கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் விசாரணை நடத்தினர். தற்கொலையெனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

# 4 புதிய முத்திரைகள்

கொழும்பு, செவ்.

தேயிலை உற்பத்தியின் நூற்றுண்டு விழாவை யொட்டி ஆகஸ்ட் முதலாம் திகதி 4 புதிய முத்திரைகள் வெளியாகவிருக்கின்றன. 4 சதம், 40 சதம், 50 சதம், ஒரு ரூபாய் முத்திரைகளாக அவை இருக்கும்.

# எதிரி விடுதலை

காங்கேசன் துறை, செவ்.

உடுவிலைச் சேர்ந்த நாகரத்தினம் தேவமலர் [வயது 23] என்பவரை அதே ஊரை சேர்ந்த அவரது மைத்துனரான தம்பு புவிராஜசிங்கம் என்பவர் பலாத்காரமாகக் கடத்திச் செல்ல முயன்றதாக சுன்னுகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதிபதி எதிரியை விடுதலை செய்தார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர்.

# கார்த்திகைக்காய் வழக்கு

காங்கேசன்துறை, திங்.

வட்டுக்கோட்டை ''கார்த்திகைக்காய்'' முக்கொலை வழக்கு இன்று மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நிட்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

டாக்டர் டபிள்யூ. வில்லியம் பிபிலே [பேராசிரியர்] கார்த்திகைக்காயின் தன்மைகள் பற்றியும் அது எவ்விதம் உடம்பிற் சென்று சிறுவர்களை எப்படி விரைவாகவும், முதியவர்களை எப்படி ஆறுதலாகவும் தாக்குகிறதென்பதை விளக்கிக் கூறினர்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர்.

வழக்கை நீதிபதி இம் மாதம் 25-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# தாக்குதல் வழக்கு எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

கந்தையா நல்லையா என்பவர் தருமபுரத்தை சேர்ந்த சோமசுந்தரம் சொக்கலிங்கம் என்பவரை பொல்லால் அடித்து படுகாயம் விளைவித்ததாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு கிளிநொச்சி மாஜிஸ்திரேட் கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. விசாரணையின்பின் மாஜிஸ்திரேட் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பழித்தார்.

இவ்வழக்கில் எதிரிசார்பில் அட்வகேட் எஸ். நாகராசா, புறக்டர் வீ. செல்லத்தம்பி, புறக்டர் எஸ். பி. மயில்வாகனம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். [அ. ந]

# 'தமிழ் நாடு' பிரேரணை

சென்னை, ஜூலை 18

சென்னை ராஜ்யத்துக்கு 'தமிழ் நாடு' என்று பெயர் சூட்டுவதற்காக இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் பிரேரணை இன்று தமிழ் நாடு கீழ் சட்ட சபையில் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் உட்பட எதிர் கட்சியினர் அனைவரும் பிரேரணையை ஆதரித்தார்கள்.

அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு ராஜ்ய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துவதற்கு இந்தத் தீர்மானம் உதவும்.

# வடபகுதிக்கு...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தெரிகிது. கனிஷ்ட பாடசாலையில் 7-ம் வகுப்பு வரையும், சிரேஷ்டபாடசாலையில் 8-ம் வகுப்பும், அதற்குக் கூடிய வகுப்புகளும் இருக்கும் இதன் மூலம் மாணவர்கள் உத்தேச கனிஷ்ட பாடசாலைகளில்சில சலுகைகளை இழக்க வேண்டியிருப்பார்களென்று அஞ்சுகின்றோம்.

### பெருந்தீங்கு விளைவிக்கும்

உத்தேச கனிஷ்டபாடசாலைகள் தற்பொழுதுள்ள ஆரம்பபாடசாலையிலிருந்தே ஆரம்பிக்கப்படவிருப்பதாக அறிகிறோம். இந்த ஆரம்ப பாடசாலைகளுக்கு போதியகட்டடங்கள். காணிகள் மற்றும் வசதிகள் கிடையாது. தற்பொழுது நாடு இருக்கும் நிதி நிலைமையில் ஆரம்ப பாடசாலைகளுக்குக்குத் தேவையானவற்றைக் கல்வி இலாகா செய்து கொடுக்குமென்பது சந்தேகத்திற்குரியது. இப்படியான தேவைகளைப் பூர்த்தி செய்யாது மேலும் இரு வகுப்புகளை, உத்தேச கனிஷ்ட பாடசாலைகளில் சேர்ப்பது எதிர்காலச் சந்ததிக்குத் தீங்கு விளைவிப்பதாகும்

### தமிழ்ப் பாடப் புத்தகங்கள்

கல்வி இலாகாவினுல் 6ம், 7ம், 8ம் வகுப்புகளுக்கு வெளியிடப்படும் பாடப் புத்தகங்கள் திருப்திகரமற்றதாக இருக்கிறது. இப்பாடப் புத்தகங்கள் அழகான அமைப்பற்றதாகவும் பெரிய அளவுள்ளதாகவும் தேவையற்ற விஷயங்களைக் கொண்டதாகவும் இருப்பதால் தமிழைப் படிப்பதில் மாணவர்களுக்கு ஒருவித விருப்பமின்மையை ஏற்படுத்துகிறது. இப்பாடப் புத்தகங்களையிட்டுத் தாமதமின்றி மறு பரிசீலனைசெய்யப்படுமென நம்புகிறோம். அ. நி.

# நாட்டிலும்நகரிலும்

[ -ம் பக்கத்தொடர்ச்சி]

ஹிட்லர் இரண்டாவது யுத்தத்தை ஆரம்பித்திருக்காவிட்டால் இதெல்லாம் நடந்திருக்குமா?

ஆபிரிக்க நாடுகளில் எல்லாம் இன்று சுதந்திரக் குழப்பங்களும், குளறுபடிகளும் நடக்கின்றன, ஆபிரிக்கக்கண்டமே நிறம் மாறி விட்டது.

ஐரோப்பா மட்டுமென்ன? அதிலும் எத்தனை பெரிய மாறுதல்கள்! இவை எல்லாவற்றிற்கும் காரண பூதர் இரண்டாவது மகா யுத்தத்தைத் துவக்கிவைத்த ஹிட்லர் தானே? இருபதாம் நூற்றுண்டில் பெரும் புரட்சியை இயற்றியவர் ஹிட்லர் என்று கூறுவதில் பிழையுண்டோ சொல்லுங்கள்!

—வழிப்போக்கன்

# வழக்கு ஒத்திவைப்பு

வவனியா, புதன்

இரசாயன பரிசோதகரிடமிருந்து அறிக்கை வராததால் பூவரசங்குள கற்பழிப்பு வழக்கை வவுனியா மாஜிஸ்திரேட் ஒத்தி வைத்தார்.

இவ்வழக்கில் பூவரசங்குளப்பகுதியில் உள்ள ஆதம் லெவ்வை என்பவர் சரோசாவுடன் தகாதமுறையில் நடந்துகொண்டார் எனக் குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

# காணவில்லை

திறப்புக்கோர்வை

18-7-67இல் கோட்டடியில் திறப்புக் கோர்வை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவற்கு சன்மானம் உண்டு. கந்தையா, 7, பெரியதெரு, யாழ்ப்பாணம். போன் 7173.

2433

# யாழ். ரயில் . . .

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

யாழ்ப்பாணம் புகையிரத நிலைய முன்புறத்தில் ஒரு பகுதி பஸ் நிலையம் அமைப்பதற்காக ஒதுக்கப்படும். மற்றைய புறத்தில் ஒரு டாக்ஸி நிலையம்அமைக்கப்படும். இந்த டாக்ஸி நிலையத்தால் டாக்ஸிகள் ஒன்றின்பின் ஒன்றாக 'கியூ'வில் நிறுத்தப்படும். இங்கு நிறுத்தப்படும் டாக்ஸிகள் பொது மக்கள் எங்கு செல்லக் கேட்டாலும் வாடகைக்கு விடவேண்டும். குறுகிய இடத்துக்கு வாடகைக்குத் தாங்கள் டாக்ஸிகளைச் செலுத்த மறுக்கும் டாக்ஸி சாரதிகள்மீது பொலிசார் சட்ட நடவடிக்கைகள் எடுப்பார்களாம்.

இந்த புகையிரதநிலையத்தில் நிறுவப்படவிருக்கும் டாக்ஸி நிலையத்தில் நிறுத்தப்படும் ஒவ்வொரு டாக்ஸி சாரதியும் புகையிரதநிலைய அதிபரிடம் 15 ரூபா பணம் செலுத்தி ஒரு வருடத்துக்கு உரிய அனுமதியைப் பெற வேண்டும்.

வாடகைக்கு விடப்படும் தனிப்பட்ட கார்கள் அங்கு நிறுத்த அனுமதிக்கப் படமாட்டாது. புகையிரதத்தால் வரும் பிரயாணிகளை ஏற்றிச் செல்ல வரும்தனிப்பட்ட கார்கள் மாத்திரம் அங்கு ஒருபுறத்தால் நிறுத்த அனுமதிக்கப்படும். [ந. நி.]

# இந்த வாரம்

● 'வட்டமேசை மகாநாடு' என்றால் என்ன? காந்தி லண்டன்மகாநாட்டுக்குச்சென்றபோது சர்ச்சில் நடந்து கொண்ட முறை? கே.பி.எச் (ஆசிரியர் ஹரன்)எழுதும்யாத்திரைக் கடிதங்களின் தொடரில் இவ்வார கடிதத்தில் இவற்றை அவர் சுவைபடக்கூறுகிறார்.

● பாரதியார் தமிழ் வாத்தியாராக வேலைபார்த்த'கதை'யை 'காலம் மறக்காத கவிஞன்' கட்டுரைத் தொடரில் பேராசிரியர் சு. சண்முகம் இவ்வாரம் சொல்கிறார்.

● சோதிடக் கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை. வாசகநேயர்கள் தங்கள் எதிர்காலம் குறித்துக் கேட்டவைகளுக்குப் பதிலளிக்கத் தொடங்குகிறார். உங்களில் பலருடைய கேள்விகளுக்கு விடை கிடைக்கலாம்.

மற்றும்

தாங்கிய தாயின் உறவென்ன? (சிறுகதை) ஆ. காமாட்சி எழுதியது க. வீ.யின் கவிதை. 'மயிலன்' எழுதும் 'சினிமாவாதி' தொடர் அம்சம்)

ந. சி. க. எழுதும் ஆராய்ச்சிக்கட்டுரை.

குடும்பச்சுடர், கலை அரங்கம், கதிரவன் எழுதும் காலச்சக்கரம் 'ராஜன்' தொகுத்த பல்சுவை, 'காங்கேயன்' எழுதும் 'களங்கம்' என்னும் மாவிட்டபுரத்து கற்பனைச்சித்திரம், அரசியல் நிருபர் எழுதும் வாரசாரம், எஸ். எம். ஜி. எழுதும் உலக மேடை ஆகிய வழக்கமான அம்சங்களும் நாளை

**21-7-67**

## ஈழநாடு

வாரமலரில் உங்களுக்கு விருந்தளிக்கக் காத்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org